2024 ஜூன் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

மக்கள் மறந்துவிடவில்லை. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கள்ளச்சாராய மரணங்கள் பற்றிய பட்டியல் என் கையில் இருக்கிறது. அதையெல்லாம் வைத்து அரசியல் பேச நான் விரும்பவில்லை. துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

என்னைப் பொறுத்தவரை, சமூக விரோத சக்திகளிடமிருந்து மக்களைக் காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றி, வணக்கம்.

6. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 29, 185 (2), 185 (3) மற்றும் 189 (3) ஆகியவற்றைத் தளர்த்துதல் (பேரவைக் கூட்ட நேரத்தில் மாற்றம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். உட்கார்ந்தே பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 287-ன்கீழ், பேரவை விதி 29-ஐத் தளர்த்தி, பேரவைக் கூட்டம் "காலை 10-00 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2-00 மணிக்கு முடிவடையும்" என உள்ளதற்குப் பதிலாக, நாளை (22-6-2024) முதல், இக்கூட்டத் தொடர் முடியும் வரை, பேரவைக் கூட்டம் "காலை 9-30 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 1-30 மணிக்கு முடிவடையும்" எனவும் மற்றும்

பேரவை விதிகள் 185(2), 185(3) மற்றும் 189(3) ஆகியவற்றைத் தளர்த்தி, இவ்விதிகளில் 'பிற்பகல் 2-00 மணிக்கு' என உள்ளதை 'பிற்பகல் 1-30 மணிக்கு' எனவும் கொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.